# இதயபூர்வமாக வரவேற்கப்படுகின்றீர்கள்



Musikschule
Region Sursee

tamilisch

## இசைக்கல்வி எதற்காக

- இசை கலாச்சாரங்களுக்கிடையிலான வேற்றுமையை இல்லாதொழிக்கின்றது
- நாம் மொழியை விளங்கிக் கொள்ளாது விட்டாலும் கூட, இசை விளைவையேற்படுத்துகின்றது
- இசை குணாம்சத்தை விருத்தி செய்ய ஊக்குவிக்கும்
- இசை புத்திஜீவியாக்குகின்றது
- இசை மகிழ்ச்சியையுண்டாக்குகின்றது

## இசைப்பாடசாலையிலுள்ள வாய்ப்புகள் எவை

சூர்சே பிராந்திய இசைப்பாடசாலையானது (MRS), மாணவர்களுக்கு ஒரு வாத்தியக்கருவியை அல்லது வாய்ப்பாட்டைக் கற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கின்றது.

இரண்டாம் வகுப்பு வரையும் பாடசாலைக் கல்வியுடன் இசையும் ஒரு பாடமாக இணைக்கப்பட்டிருக்கும். அதன் பின்பு, மாணவ மாணவிகள், தாம் வாத்தியக்கருவிகளை இசைக்கப்பழகுவதா அல்லது வாய்ப்பாட்டு பழகுவதா என முடிவெடுக்க முடியும். கிற்றார் போன்ற இழுத்து இசைக்கும், வயலின் போன்ற நீவி வாசிக்கும், விசைத்தட்டுப் போன்ற விரல்களால் அழுத்தி வாசிக்கும், புல்லாங்குழல் போன்ற காற்றூதி வாசிக்கும் மர அல்லது தகர இசைக்கருவிகள் மட்டுமல்லாமல் கைகளால் அடித்து வாசிக்கும் மேளம் போன்ற வாத்தியக்கருவிகள் எனப் பலவிதமான வாய்ப்புகள் உண்டு.

## எது பொருத்தமான இசைக்கருவி

எதிர்காலத்தில் தாம் பயில விரும்பும் வாத்தியக்கருவியைத் தேர்ந்தெடுப்பதை இலகுவாக்குவதற்காக, பிரத்தியேகமான நிகழ்ச்சிகளை ஆசுளு நடாத்துகின்றது. இந் நிகழ்வின் போது, வெவ்வேறுபட்ட வாத்தியக்கருவிகள் காண்பிக்கப்படும். நிகழ்வின் இறுதியில் தாமே இசைக்கருவிகளை இசைத்துப் பார்க்க முடியும்.



**27. சித்திரை 2018**
வெள்ளிக்கிழமை
18.00 மணி

**Instrumentenvorstellung**
Schulhaus Schenkon

**28. சித்திரை 2018**
சனிக்கிழமை
09.30 மணி

**Instrumentenvorstellung**
Kloster Sursee

## நண்பர்களுடன் இணைந்து இசைத்தல்

இணைந்து வாத்தியங்களை வாசிப்பது உல்லாசமாக இருப்பதுடன் இணைவாக்கத்தையும் ஊக்குவிக்கும். வாத்தியக்கல்வியுடன் மெல்லிசையையும் MRS (சூர்சே பிராந்திய இசைப்பாடசாலையானது) பயிற்றுவிக்கின்றது.







## இசைப்பயிற்சிகளுக்கான கட்டணம் எவ்வளவு

வாத்தியக்கருவிகள் அல்லது வாய்ப்பாட்டுப் பயிற்சிகளுக்கான இசைப்பயிற்சிகளுக்கு, இரண்டாம் வகுப்பின் பின்பு, தனியான கற்பித்தலுக்கு ஒரு மாதக் கட்டணம் (கிழமையில் 30 நிமிடங்கள்) CHF 61.70 ஆகும். இசை பயிலும் வருடத்தில் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை CHF 370.00 கட்டணமாக அறவிடப்படும். எப்போதும் இசைப்பயிற்சி விண்ணப்பம், ஒரு வருடத்துக்கானது. நிதி நெருக்கடிப் பிரச்சினையுள்ள பெற்றோர் - பாதுகாவலர் அதனைத் தெரியப்படுத்தி விண்ணப்பித்தால், பயிற்சிக்கான கட்டணக்குறைப்பு சாத்தியமாகும்.

## டொய்ச்மொழியில் தகவல் கைநூல்

வாத்தியக்கருவிகள், எமது ஆசிரியர் போன்ற விரிவான தகவல்கள், 2018/2019 ஆம் ஆண்டுக்குரிய எமது தகவல் கைநூலில் டொய்ச்மொழியில் முழு விளக்கமாக தரப்பட்டுள்ளது.

## மேலதிக தகவல்களை நான் எங்கு பெறலாம்

இசைப்பாடசாலையின் செயலாளர் காரியாலயம், மேலதிக வினாக்களுக்கு விடையளிக்கவும் மேலதிக தகவல்களைத் தரவும் ஆயத்தமாகவுள்ளது. காரியாலயங்கள் கீழ்க்காணும் நேரங்களில் திறந்திருக்கும்:

திங்கள் – வியாழன் மணி

08.30–11.30

14.00–16.00

வெள்ளி

08.30–11.30

Musikschule
Region Sursee
Geuenseestrasse 2b
6210 Sursee
041 925 82 60
info@m-r-s.ch
www.m-r-s.ch